புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

==========================================================================

# அரசியல் மேடைப் பேச்சுகளில் கலைஞரின் ஆளுமையும் மொழித்திறனும்

முனைவர் ரா.சே. பாலாஜி, உதவிப் பேராசிரியர்,
தமிழ்த்துறை, கே.எம்.ஜி. கல்லூரி,
குடியாத்தம்.

==========================================================================

## முன்னுரை

*'அடிமை நாட்டில் அரசியல் இருக்காது' என்னும் பொன்மொழிக்கேற்ப அடிமை இந்தியாவின் அடிமை விலங்கொடித்து விடுதலை பெற துணையாய் நின்றது மேடைப் பேச்சே ஆகும். தொடக்க காலத்தில் நாட்டு விடுதலையே அரசியல் மேடைப் பேச்சுகளின் பேசு பொருளாய் இருந்தது. இந்தியத் திருநாட்டின் விடுதலைக்குப் பின்னர் நாட்டு முன்னேற்றம், சமுதாய முன்னேற்றம், மாநில நலன், மொழிப் போராட்டம், பல்வேறு உரிமை சார்ந்த சிந்தனைகள் என்று அரசியல் களம் நீண்டது, நீளும்.*

*தமிழக அரசியல் வரலாற்றில் பல்வேறு அரசியல் மாற்றங்களுக்குக் காரணமாய் அமைந்தது அரசியல் மேடைப் பேச்சு ஆகும். அரசியல் இயக்கங்களும் தங்களுடைய கொள்கைகளை மக்களிடையே கொண்டு செல்ல மேடைப் பேச்சையே முதன்மைக் காரணங்களாகக் கொண்டன. மனித குல வாழ்வில் நீங்கா இடம் பெற்றுள்ள அரசியல் அமைப்பில் தமிழகத்தில் சுதந்திரத்திற்குப் பிறகான அரசியல் அமைப்பு பதவிகளில் பங்கெடுத்த கலைஞர் மு. கருணாநிதியின் அரசியல் மேடைப்பேச்சுகளின் ஆளுமையையும் மொழித் திறனையும் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.*

## அரசியல் மேடைப்பேச்சுகளில் கருத்தமைவு

*சாதாரண மனிதர்களைக்கூட மக்கள் செல்வாக்கு மிக்க தலைவர்களாக உயர்த்திக் காட்டியதில் அரசியல் மேடைப்பேச்சு இன்றியமையாதது. அரசியல் மேடைப்பேச்சுகளில் கருத்தமைவு என்பது நாட்டின் நிலை, வரலாறு, சமயம், ஆட்சிமுறை போன்ற பொது நோக்கில் பேசப்படுவதாக அமைந்துள்ளது.*

*அரசியல் கூட்டங்கள், பொதுவாக நிதிநிலைக் கூட்டங்கள், சாதனை விளக்கக் கூட்டம், தேர்தல் பிரச்சாரக் கூட்டம், தேர்தல் நிதிபெறும் கூட்டம், தெருமுனைப் பரப்புரைகள், கொள்கை விளக்கக் கூட்டங்கள், அறப்போராட்ட நிகழ்வுகள், மாநாடுகள், தலைவர்களின் பிறந்தநாள் மற்றும் நினைவுநாள் பொதுக் கூட்டங்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற பேச்சுகள் அரசியல் மேடைப்பேச்சுகளில் இடம்பெறுபவையாகும்.*

## கலைஞர் மு. கருணாநிதியின் அரசியல் பங்களிப்பு

*1924ஆம் ஆண்டு ஜுன் மூன்றாம் தேதி நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள திருக்குவளை என்னும் கிராமத்தில் முத்துவேலர் - அஞ்சுகம் அம்மையாரின் மகனாய்ப் பிறந்தவர் மு.கருணாநிதி ஆவார். தொடக்கக் கல்வியைத் திருக்குவளையிலும், திருவாரூர் மாவட்ட நாட்டாண்மைக் கழக உயர்நிலைப் பள்ளியில் பள்ளியிறுதி வகுப்பு வரைப் பயின்றார். தமது பள்ளிப் பருவத்திலேயே நாடகம், கவிதை, இலக்கியம் ஆகியவற்றில் அதிக ஆர்வம் கொண்டிருந்த இவர் 'மாணவநேசன்' என்னும் கையெழுத்துப் பிரதியை வெளியிட்டு வந்தார். தம்முடைய 14ஆவது வயதிலேயே இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கு கொண்டார்.*

கல்லக்குடி பெயர் மாற்றப் போராட்டம் இவரது அரசியல் வாழ்வின் திருப்புமுனையாக அமைந்தது. 1957ஆம் ஆண்டு முதல் 2016ஆம் ஆண்டு வரை நடைபெற்ற 13 சட்டமன்ற தேர்தல்களில் பங்கேற்று அனைத்து தேர்தல்களிலும் வெற்றி பெற்றவர் இவராவார்.

அண்ணாவின் மறைவிற்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழகத் தலைவராகப் பொறுப்பேற்ற இவர் 2018ஆம் ஆண்டு வரையில் ஐம்பது ஆண்டு காலம் அவ்வியக்கத்தின் தலைவராகத் திகழ்ந்தார். 1969, 1971, 1989, 1996, 2006 ஆண்டு என்று ஐந்து தேர்தல்களில் இவரது தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற ஐந்து முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராய் பதவி வகித்தார்.

தமிழக அரசியல் வரலாற்றில் நீண்டதொரு அரசியல் அனுபவமும் ஆற்றலும் பெற்றவராக விளங்கியவர் கலைஞர் மு. கருணாநிதி. எண்பது ஆண்டு கால பொதுவாழ்வு, அறுபது ஆண்டுகால சட்டமன்ற உறுப்பினர், ஐம்பது ஆண்டு காலம் ஓர் இயக்கத்தின் தலைவர் என்று தன்னுடைய வாழ்வையே அரசியலாகக் கட்டமைத்துக் கொண்டவர் மு. கருணாநிதி. பெரியாரிடம் நேரடியாக அரசியல் பயின்று, அறிஞர் அண்ணாவின் அடிச்சுவட்டில் தமது அரசியல் பயணத்தை அமைத்துக் கொண்ட கருணாநிதி அண்ணாவைப் போலவே சிறுகதை, நாடகம், கட்டுரை, கடிதம், திரைப்படம் என்று தனது அண்ணனின் காலடித் தடங்களில் தடம் பதித்தவர்.

எழுத்தாற்றல், பேச்சாற்றல் என்ற இரண்டிலும் ஆளுமைப் பெற்றிருந்த மு.கருணாநிதிக்கு, அண்ணாவைக் காட்டிலும் கூடுதலாக ஒரு துறை கைக்கொடுத்தது. அது அவரது கவிதை புனையும் ஆற்றல். எழுத்தாற்றலைப் பொறுத்தவரை, 10 சமூக நாவல்கள், 6 சரித்திர நாவல்கள், தன்வரலாற்று நூல் 6 தொகுதி, பயண இலக்கியம் ஒன்று, 37 சிறுகதைகள், 2 நாடகங்கள், 6 இலக்கிய உரை நூல்கள், 8 கவிதை நூல்கள், 12 கடித இலக்கிய தொகுதிகள், 70 திரைப்படங்களுக்கு கதை, வசனம் என்று அவரது எழுத்துப் பயணம் நீண்டது. பள்ளிப் படிப்பில் எஸ்.எஸ்.எல்.சி. மட்டுமே முடித்திருந்த மு.கருணாநிதியின் இத்தகைய எழுத்தாற்றலுக்குக் காரணமாய் அமைந்தவை அவரது தமிழார்வமும், வாசிப்பு பழக்கமுமே ஆகும்.

வாசிப்பின் வழியே தான் கற்றதையெல்லாம், தனது சிந்தனையின் வழியே தான் சிந்தித்ததை எழுத்தாக வடித்ததை எல்லாம் தனது பேச்சாற்றலின் வழியே பாமர மக்களுக்கும் கொண்டு சேர்த்தவர் மு. கருணாநிதி, இலக்கியம், கதை, கவிதை, நாடகம், கடிதம், திரைப்படம் என்று எந்தத் துறையிலும் அரசியலை இழையோடச் செய்தவர். சுருங்கச் சொன்னால் அவரது எழுத்தாற்றலில் அரசியல் கலந்திருக்கும். அவரது பேச்சாற்றலில் மேலே சொன்ன அத்தனைக் கூறுகளும் இடம் பெற்றிருக்கும். அவரது மேடைப்பேச்சு வெற்றி பெற்றதற்கான காரணங்களில் முதன்மையானது பல்துறை அறிவுப் பரந்த சொல்லாற்றலே எனலாம்.

எழுபது ஆண்டுகால மேடைத்தமிழை அலங்கரித்தவர்களுள் மு. கருணாநிதியும் ஒருவர். அவரது கரகரத்தக் குரலில் அனைவரையும் விளித்து 'என் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புக்களே' என்று அழைக்கத் தொடங்கும்போது அவரது கட்டுப்பாட்டில் செல்லும் மொத்தக் கூட்டமும் அவர் 'வணக்கம், நன்றி' என்று தனது உரையை முடிக்கும் வரையிலும் அவரது மந்திரத் தமிழுக்கு கட்டுப்பட்டதாகவே இருக்கும்.

அண்ணாவிற்கு பிறகு மேடைத் தமிழை அலங்கரித்த கலைஞர் மு.கருணாநிதியின் பேச்சாற்றலை,

'மேடைப்பேச்சு கலைக்கரசன்; நாட்டின் நாகரீகத்திற்குக் கண்ணாடி; பாமர மக்களின் பல்கலைக்கழகம்; உணர்ச்சிகணைத் தூண்டிவிட்டு உள்ளத்தில் புதைந்து கிடக்கும் அன்பையும் தூய்மையையும் வெளிப்படுத்தி மக்களைப் பண்படுத்தும் மகத்தான கலை; அக்கலையில் சிறந்து விளங்கியவர்களுள் தமிழகத்தில் அண்ணா அரசன் என்றால் கலைஞர் மணிமுடி ஆகிறார்'[1] என்று சி. பாலசுப்பிரமணியன் பாராட்டி உள்ளார்.

'கலைஞர் என்று எல்லோராலும் சிறப்பாகவும் பெருமையோடும் அழைக்கப்பெறும் இவர் பேச்சினிலே தென்றலின் இனிமையுண்டு! தீயின் வேகமுண்டு! புயலின் வீச்சுண்டு! புனலின் பெருக்குண்டு! இடியின் முழக்கமுண்டு! எழுமின்னல் ஒளியுண்டு! நகைச்சுவை வெடிகளுண்டு! நல்ல தமிழ்த் தேனுண்டு! சிலேடை நயமுண்டு! சிந்தனை விருந்துண்டு! சூழ்ந்த கருத்துண்டு! சீர்மைமிகு சிறப்புண்டு! பொருட்செறிவு எப்போதுமுண்டு! இவையனைத்தும் கலைஞரது பேச்சினிலே ஆனந்த நர்த்தனமாடுகின்ற அதிசயத்தை எல்லோரும் கேட்டு மகிழ்ந்து

வியந்திருக்கின்றனர், வியக்கின்றனர் என்றால் அது மிகையில்லை!'[2] என்று கலைஞரின் மேடைப்பேச்சின் இயல்பை ஞானம் அவர்கள் குறிப்பிடுகின்றார்.

'மக்கள் மனம் கவரும் வகையில், செந்தமிழ் நடை வளம் காட்டியும் கருத்துத் தொடர்ச்சியும் வாதத்திறனும் குன்றாமல் தமது இலட்சியத்தை மக்கள் ஏற்றிடச் செய்யும் ஆற்றல் மிக்கப் பேச்சாளராகத் திகழ்பவர் கலைஞர் மு. கருணாநிதி. நான் இதனை நாளும் கண்டும் கேட்டும் வருகிறேன்'[3] என்று கலைஞரின் சொல்லாற்றாலை அவரது நண்பரும், சமகால அரசியல்வாதியுமான க. அன்பழகன் குறிப்பிடுகிறார்.

ஒரு நதியை உயிரோட்டமாக வைத்திருப்பது புதிய தண்ணீர் என்றால் ஒரு பேச்சாளனை உயிரோட்டமாக வைத்திருப்பது அவனது வாசிப்பு பழக்கம் என்பதற்கேற்ப கருணாநிதி அவர்கள் தினந்தோறும் வாசிப்பு பழக்கத்தைக் கைக்கொண்டிருந்தார். மேலும், அவரது மிகுந்த நினைவாற்றலும் அவர் ஒரு சிறந்த பேச்சாளராகத் திகழ உதவிபுரிந்தது.

'அனைத்துக் கட்சியினர் கலந்துகொள்ளும் கூட்டத்தில் தனக்கு முன்னால் பேசிய அணைந்து பேச்சுக்களிலிருந்தும் மேற்கோள்களை மறக்காமல் எடுத்துக் காட்டுவது கலைஞரின் தனித்தன்மையாக உள்ளது'[4] என்று கலைஞரது நினைவாற்றலைப் பற்றி அறந்தை நாராயணன் சுட்டுகிறார்.

கலைஞர் மு. கருணாநிதியின் பேச்சாற்றல் சிறப்பிற்கு அவரது மொழிவளம், வாசிப்பு, நினைவாற்றல் அவரது கொள்கை ஈர்ப்பு முதலானக் காரணிகள் காரணமாக அமைந்துள்ளதை அறிஞர்களின் கூற்றுவழி அறிய முடிகிறது.

## கலைஞரின் மேடைத்தமிழ் ஆளுமை

கலைஞர் மு. கருணாநிதி சிறுகதை, நாவல், கட்டுரை, கவிதை, கடிதம், நாடகம், திரைப்படம் என்னும் பல துறைகளின் வழியே தாம் பெற்ற அனுபவங்களைத் தமது பேச்சாற்றலின் வழியே வெளிப்படுத்தியுள்ளார். கலைஞரின் பேச்சாற்றல் ஆளுமைத்திறனை அரசியல், இலக்கியம், கவியரங்கம், சட்டமன்ற சொற்பொழிவுகளின் வழி இனம் காணமுடியும்.

சென்னை மாகாணம் என்ற பெயரை மாற்றி இதற்குத் தமிழ்நாடு என்று பெயர் சூட்டியவர் அறிஞர் அண்ணா. இந்நாட்டிற்கு அண்ணா அவர்கள் 'தமிழ்நாடு' என்று பெயர் சூட்டக் காரணம் என்ன என்பதை விளக்கும் கலைஞரின் பேச்சாற்றல் அவரது கொள்கை பிடிப்போடு கூடிய 'அரசியல் சொற்பொழிவு'க்குச் சான்றாக அமைகிறது.

'தமிழ்நாடு என்பதற்காகத்தான் நம்முடைய நிலத்திற்குத் தமிழ்நாடு என்று பெயர் வைத்திருக்கிறோம். மொழியை எங்கே மறந்து விடுவோமா என்பதற்காக அந்த நாட்டின் பெயரில் தமிழைச் சேர்த்துத் தமிழ்நாடு என்று வைத்திருக்கிறார்கள்.

தமிழ்நாடு என்று பெயர் வைத்திருப்பதற்குக் காரணம்,

தமிழ்நாடு!
தமிழ்க் கலாச்சாரத்தை நாடு!
தமிழ்ப் பண்பை நாடு!
தமிழ் இலக்கியத்தை நாடு!
தமிழ் உயர்வை நாடு!
என்பதற்காகத்தான்.

தமிழ்நாடு என்பதை ஒரு நிலத்தின் பெயராகக் கருதாதீர்கள். நமக்கு நாமே சொல்லிக்கொள்ளும் அறிவுரை என்று கருதுங்கள். ஆகவே, தமிழ்ச் சமுதாயத்தைப் பேணிக் காப்பாற்றுவீர். அந்தத் தமிழ்ச் சமுதாயம் உலகத்தில் ஒரு காலத்தில் இருந்ததைப் போல இல்லாமல் இன்று மங்கிக் கிடக்கிறது. அதை மீண்டும் ஒளிபெறச் செய்ய நாம் பாடுபட்டாக வேண்டும். அதற்கு வருகிற இடையூறுகளை எல்லாம் களைந்தாக வேண்டும். அந்த உறுதியை, அந்தச் சூளுரையை நாம் மேற்கொள்ள வேண்டும்'[5] என்று குறிப்பிடுகிறார். கலைஞர் அரசியல் பேச்சாளர் மட்டுமல்ல சிறந்த இலக்கியப் பேச்சாளரும் கூட. இவரது இலக்கியப் பேச்சில் அவரது இலக்கியப் புலமையும், பல நூல் கற்றறிந்த நுண்ணறிவும் மிளிர்வதைக் காணமுடியும். பாரதிதாசன் பிறந்தநாள் விழாவில் அவர் ஆற்றிய உரை அவரது இலக்கியப் பேச்சிற்கு எடுத்துக்காட்டாய் விளங்குகிறது.

'பாரதியாருக்குப் பிறகு பாரதிதாசனுக்குப் பிறகு எத்தனையோ கவிஞர்கள் வந்திருக்கிறார்கள் என்றாலும் பாரதிதாசனுக்கு ஈடு, பாரதிதாசனேதான்!

*பாரதிதாசன் உவமையழகுக்கு ஒரு எடுத்துக்காட்டு சொல்ல வேண்டுமென்றால், பொழுது விடிவதைப் பற்றி அவர் சொல்கிறார். இப்பொழுதுகூட தமிழ்நாட்டில் பொழுது விடிந்து கொண்டிருக்கிறதல்லவா? பொழுது விடிவது எப்படி இருக்கிறதாம் தெரியுமா?*

*'தொட்டி நிலத்தில் சுண்ணாம்பு கலந்த கலப்பன்ன*
*இருள்தன் கட்டுக்குலைந்தது' என்று கூறுகிறார்.*

*தொட்டியின் நீலவண்ணம் கரைத்து வைக்கப்பட்டிருக்கிறது. அதிலே கொஞ்சம் கொஞ்சமாகச் சுண்ணாம்பைக் கலந்து கொண்டேயிருந்தால் அந்த நீல வண்ணத்தின் தாக்கம் குறைந்து சுண்ணாம்பின் வெண்மை வண்ணம் அந்தத் தொட்டியிலே பரவ ஆரம்பிக்கிறதாம். அதைப்போல் காலையிலே வைகறை வருகிறதாம். கரிய உதயத்திற்குமுன் வருகின்ற அந்த வைகறையை பாரதிதாசன் இப்படிக் குறிப்பிடுகின்றார்*

*இருள் விலகியது என்பதை 'இருள் கட்டுக்குலைந்தது' என்கிறார். இருள் கட்டுக் குலைந்தது என்பது சாதாரணமானதல்ல. கம்பீரமான ஆஜாறுபாகுவானத் தோற்றத்துடன் இருக்கின்ற ஒருவன் கொஞ்சம் கொஞ்சமாக இளைத்துத் துரும்பாக கட்டுக் குலைந்து போனால், பிறகு அவன் கம்பிரமாகக் காணப்படமாட்டான். அதைப் போலத்தான் இருள் கட்டுக் குலைந்து போய்விடுகிறது என்கிறார்.'*[6]

*பாரதிதாசன் கதைகளில் இவர் எவ்வளவு ஆழங்கால் பட்டவர் என்பதை மேற்கண்ட பேச்சு எடுத்துக்காட்டுகிறது.*

*1986 ஆண்டு நடைபெற்ற அருப்புக்கோட்டை, நெல்லை ஆகிய தொகுதிகளின் இடைத்தேர்தலில் தி.மு.க. தோல்வியடைந்தது. செப்டம்பர் 5 அன்று கலைவாணர் அரங்கில் நடைபெற்ற அண்ணா பிறந்த நாள் கவியரங்க நிகழ்வில் கலைஞர் தலைமையேற்று நிகழ்த்திய தலைமை உரையின் சிறு பகுதி வருமாறு:*

*'கலைவாணர் அரங்கத்தில்...*
*கவிவாணர் அரங்கம் இன்று...*
*காதில் விழுகிறது சிலபேரின்*
*கேலிச் சிரிப்பு...*
*கவியரங்கம் ஒருகேடா கழகத்திற்கு,*
*விழா நடத்த சிறிதேனும் வெட்கம்*
*இல்லையோ இவர்களுக்கு...*
*வெற்றி பெற்ற நாமிங்கே வீரவாள்*
*சுழற்றி நிற்க,*
*வீணர்களுக்குகென்ன முப்பெரும் விழா*
*வேண்டிக் கிடக்குதென ஆணவக் குரல்*
*ஒன்று கேட்குதங்கே*
*விளக்கமொன்று அவர்களுக்கும்*
*உங்களுக்கும் சொல்வேன் நான்...*
*விளக்கை அணைத்து விட்டு*
*வீட்டுக்குள் புகுந்த திருடன்...*
*அகப்பட்டதை சுருட்டிக் கொண்டு*
*அகப்படாமல் ஓடியது போல்...*
*அருப்புக்கோட்டை, நெல்லை*
*தொகுதிகளை வென்று விட்டார்...*
*இதற்குத்தான் நான் முன்பே சொன்னேன்,*
*இந்த இடியமீன் ஆட்சியிலே நமக்கு*
*இடைத்தேர்தல் எண்ணம் எள்முனையும்*
*வேண்டாமென்று,*
*இருந்தாலும் போர்க் களத்தில்*
*விழுப்புண் பெறுவதே பெருமையென்று,*
*இனிய உடன்பிறப்புகள் எல்லோரும்*
*இருகருத்துக்கிடமின்றி எடுத்துரைத்த*
*காரணத்தால்,*

*பணநாயக படை எதிர்த்து நமது*
*ஜனநாயக படை மோதிற்று...*
*மறைந்திருந்து மானமிகு வாலியை*
*வீழ்த்திய*
*மாண்புமிகு ராமச்சந்திரனை,*
*மாவீரன் என்று போற்ற மகாகவி*
*கம்பனே தயங்கினானென்றால்,*
*மாண்டாலும் வெற்றி*
*வாலிக்குத்தானே...*
*ஆண்டாலும் அவன் தம்பி சுக்ரீவன்*
*துரோகி தானே...'[7]*

*என்று கழகத்தின் தோல்வியையும் வாலி வதைக்கு ஒப்பிட்டுத் தன்னுடைய தொண்டர்களை உற்சாகம் அடையச் செய்யும் ஆற்றல் அவரது கவிதைக்கும் தமிழுக்கும் இருந்தது. இத்தகைய ஆளுமைத் திறனை எதிர்கட்சியாய் இருந்தபோதும் கழகத்தைக் கட்டிக் காக்க அவருக்குத் துணைநின்றது.*

*அரசியல், இலக்கிய, கவியரங்கப் பேச்சுகளுக்குச் சற்றும் குறைவு இல்லாத தன்மை உடையவை அவரது அமைச்சரவை, சட்டமன்றப் பேச்சுகளாகும். இதில் அவரது நகைச்சுவை உணர்வும், சமயோசித அறிவும் வெளிப்படுவதைக் காணமுடியும்.*

*'தமிழக அமைச்சரவைக் கூட்டத்தின் முடிவுகள் செய்திக் குறிப்பாகத் தரப்படுகின்றன. அதில், கள்ளச்சாரயத்தைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கை தீவிரப் படுத்தப்பட்டுள்ளன...' என்று இருக்கின்றது.*

*'நடவடிக்கை என்று ஒருமையில் இருப்பதால் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது' என்று திருத்திக் கொள்ளுங்கள் என்கிறார் முதல்வர் கருணாநிதி. இடைமறித்து, 'நடவடிக்கையில் கள் சேர்த்துவிட்டால் போதுமே?' என்கிறார் ஒரு நிருபர். 'கள் வேண்டாம். கள்ளச் சாராயத்துக்கு காரணமே அதுதான்!' என்கிறார் முதல்வர் சிரித்தவாறே.'[8]அவரது சட்டமன்றப் பேச்சுகளும் இத்தகைய சுவை நிரம்பியவை தான். 'என் கிட்டப்பா: தஞ்சை நகரத்தை அடுத்த பகுதியில் சில பல ஆண்டுகளுக்கு முன்னால் விமான தளம் உருவாக்கப்பட சில பல லட்சம் செலவழிக்கப்பட்ட பிறகும் கூட செயல்படுத்தப்படாமல் கைவிடப்பட்டிருக்கிறதே, தொடர்ந்து அதைச் செயல்படுத்தி வைக்க அரசு ஆவன செய்ய முன்வருமா?*

*முதல்வர் கலைஞர்: திரு. கிட்டப்பா அவர்களுக்கு நான் அளிக்க விரும்பும் பதில் 'அது இப்போது கிட்டாதப்பா' என்பதுதான். கு. காமாட்சி: தலைவர் அவர்களே, மதுரை மீனாட்சிக்கு வைரக் கிரீடமாக, வைர அட்டிகையாக, இன்னும் இருக்கின்ற பல நகைகளின் மொத்த மதிப்பு எவ்வளவு கோடி இருக்கும்?*

*முதல்வர் கலைஞர்: மீனாட்சிக்கு இருக்கன்ற சொத்தின் மதிப்பைச் சொன்னால் காமாட்சிக்குப் பொறாமை ஏற்படும்'[9] இவ்வாறு கலைஞரது அரசியல் சொற்பொழிவு எனில் கொள்கை முழக்க மாகவும், இலக்கியப் பேச்சு எனில் அவரது ஆழ்ந்த இலக்கியம் புலைமையை வெளிக்காட்டுவதாகவும், கவியரங்கம் எனில், கேட்போர்க்குச் சுவையும் இனிமையும் பயப்பதாகவும், சட்டமன்ற உரைகள் எனில் நகைச்சுவை உணர்வும், சமயோசித அறிவும் மிளிரும் ஆளுமைப் பண்புகள் நிறைந்திருக்கும் என்பதற்கு மேலே எடுத்துக் காட்டிய பகுதிகள் சான்றாகத் திகழ்கின்றன.*

## கலைஞரின் மொழித்திறன்

*அரசியல், இலக்கியம், கவியரங்கம், சட்டமன்றம் என்று பல தளங்களில் தமது சொல்லாற்றலை வெளிப்படுத்தியக் கலைஞர், தமது கருத்துக்களை உணர்த்த*

*நடப்பியல் சான்று காட்டல் புள்ளிவிவரம் கூறல் வருணனை நடை உருக்கமானப் பேச்சு முதலிய உத்திகளைக் கையாண்டு தம்முடைய உணர்வுகளையும், கருத்துக்களையும் விளக்கியுள்ளார்.*

*இந்திய நாட்டின் இழிநிலைகளுள் ஒன்றாகக் கருதப்படுகிற சாதிய வேற்றுமைகளை,*

*'தமிழ்நாட்டில் ஒரு மரம் இருக்கிறது. அதற்குப் பெயர் அத்தி மரம். அது போன்ற மரம் வேறு பெயரில் உங்கள் மாநிலத்தில்கூட இருக்கலாம். அந்த மரத்தில் இலைகளிலும் காய் காய்க்கும்.*

கிளையிலும் காய் காய்க்கும். அடிமரத்திலும் காய் காய்க்கும். எல்லாக் காய்களையும் அத்திக்காய் என்றுதான் சொல்வோம் அதைவிட்டு உச்சியில் காய்த்தக் காயை ஆப்பிள் காய் என்றும், அடிமரத்தில் காய்த்த காயைத் திராட்சை என்றும், வேரிலே காய்த்த காயை ஆவக்காய் என்றும் சொல்லமாட்போம். அதைப் போலவே கடவுளுடைய உடம்பில் எந்த இடத்தில் பிறந்தாலும் அவன் மனிதனே தவிரச் சாதிவாரியாகப் பிரிக்கப்படக் கூடியவன் அல்ல'[10] என்று நடப்பியலோடு கூடிய உவமைகளைச் சான்று காட்டி இத்தகைய வேற்றுமை எண்ணங்களைக் கண்டிக்கிறார்.

கலைஞரின் பேச்சில் தனித்த இடத்தைப் பெறுவது புள்ளிவிவரப் பேச்சாகும். புள்ளிவிவரப் பேச்சு உண்மை நிலையை உணர்த்துவதோடு ஒப்பீட்டு முறைப் பேச்சாகவும் விளங்குகிறது. 1974ஆம் ஆண்டு ஜனவரி 16ஆம் நாள் கல்லூரி பாடநூல் வெளியீட்டு விழாவில் கலைஞர் நிகழ்த்திய உரையை அவரது புள்ளிவிவரப் பேச்சிற்குச் சான்றாகக் கூறலாம்.

தமிழ்ப் பாடநூல் நிறுவனம், 1964ஆம் கண்டு துவங்கப் பெற்றது. தொடக்கத்தில் மூன்று ஆண்டுகளில் 35 நூல்களையும், 1969 முதல் 1970 வரை 231 நூல்களையும், 1970 முதல் 73 வரை 334 நூல்களையும், இன்றைக்கு வெளியிடுகின்ற 166 நூல்களையும் உள்ளடக்கி அறுநூறு நூல்களை வெளியிட்டிருப்பது பாராட்டுக்குரிய ஒன்றாகும்.

கல்லூரி நூல்கள் அந்தந்த மாநில மொழிகளில் வெளியிடப்பட வேண்டும் என்கிற கருத்துக்கு ஏற்ப, இந்தியாவின் வேறு மாநிலங்களை ஒப்பிடும் போது, குஜராத் மாநிலம் 104 நூல்களை வெளியிட்டிருக்கிறது. கர்நாடகம் 16 நூல்களை வெளியிட்டிருக்கிறது. மத்திய பிரதேசம் 77 நூல்களை வெளியிட்டிருக்கிறது. ஆந்திரம் 135 நூல்களை வெளியிட்டிருக்கிறது. மற்ற மாநிலங்கள் குறைவான நூல்களைத் தான் வெளியிட்டிருக்கின்றன. நாம் அறுநூறு நூல்களை வெளியிட்டிருக்கிறோம் இது பெருமைப்படத்தக்க ஒன்று.'[11]

புள்ளிவிவரப் பேச்சு என்பது தயாரிப்பு முறைப் பேச்சாகத் திகழ்ந்தாலும், கூறுவோர் வசீகரமாகக் கூறும்போது கேட்போர் விரும்பிக் கேட்பர். கலைஞரின் பேச்சில் அத்தகைய வசீகரம் இருந்தது.

இலக்கியப் புலமைப் பெற்றிருந்த கலைஞரின் மொழிநடை வகைகளுள் வருணனை நடையும் ஒன்று. சொல்லும் செய்தியைக் கேட்போர் வியக்கும் வண்ணம் கூறவும், கூறும் செய்தியில் இடம்பெறும் மனிதர்கள், பொருள், இயற்கை ஆகியவற்றைக் கேட்போர் மனத்தின்முன் காட்சிகளாக நிலை நிறுத்தவும் 'வருணனை நடை' பயன்படுகிறது.

'தாங்கிப் போரிட்ட கேடயம் தரையில் கிடக்க; அதில் தங்கமகன் மார்பில் அம்புதாங்கி வீழ்ந்து கிடந்தான்! வெற்றியம்மா வெற்றி! என்றான். அவன் நெற்றியில் முத்தமிட்டு என் நித்திலமே! போர்முனையில் உயிர்விட்டு மானம் காத்த தந்தைக்கு நேர் வழித் தோன்றலாய் வந்துதித்தாய் வாழ்க! என்றேன். ஊடுருவியிக்கின்றதே மார்பில் அம்பு - வலி உனக்குத் தாங்காதே மகனே! என்றேன்; அழுதுவிட்டேன். உண்மையா அம்மா? உன் கண்ணால் கண்டு நீ எனக்கு உரைக்கும் வரை நான் உணரவில்லையம்மா! என்றான். உயிர்விட்டான் மடிமீது! போய் விட்டான்!'[12] என்று சங்க இலக்கியம் பற்றி பேசும்போது இத்தகு வருணனை நடை அவருக்கு கைத்தந்துள்ளதை அறிய முடிகிறது.

'புத்தகங்களைப் படிக்க வேண்டும் என்கிற அண்ணா அவர்களின் ஆர்வம். அதற்கு ஒரு உச்சகட்டத்தைச் சொல்ல வேண்டும் என்றால் - அண்ணா அவர்கள் நோய்வாய்ப்பட்டு, அமெரிக்கா சென்று அமெரிக்காவில் இருந்து திரும்ப வந்து, மீண்டும் இரண்டாவது தடவையாக நோய் அவரைப் பற்றிக் கொண்டு அடையார் மருத்துவ மனையில் அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்ற சூழ்நிலையில் - இரண்டாவது முறையாக மருத்துவமனையிலே அண்ணா அனுமதிக்கப்பட்டார். நானும் பேராசிரியர் போன்றவர்களும் அவரைச் சூழ இருந்தோம்.

அவரை அறுவைச் சிகிச்சைக்காக அழைத்துச் செல்கின்ற நேரம் வரையில் (அறுவைச் சிகிச்சைக்குச் சென்ற பிறகு அண்ணா கண் திறக்கவில்லை, பிறகு மறைந்து விட்டார்) - ஆனால் செல்கின்ற நேரம் வரையில் அவர் ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டே இருந்தார். அந்தப் புத்தகத்தைக் கீழே வைக்கவே இல்லை. அங்கு இருந்த மருத்துவர்கள் அண்ணா அவர்களை, 'அறுவை சிகிச்சை அறைக்கு வாருங்கள்' என்று அழைத்துச் செல்ல வந்த பிறகுதான், அந்தப் புத்தகத்தை அண்ணா அவர்கள் மூடி வைத்தார்கள். அப்படி இறுதி கட்டத்திலேகூட - இறுதி மூச்சு விடுகின்ற நேரத்திலே கூட தம்முடைய உயிர் இனி நிலைக்கப் போவதில்லை என்று தாமே உணர்ந்த அந்தச் சூழலிலேகூட - அண்ணா அவர்கள் புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தார்'[13] என்று

*கன்னிமாரா நூல்நிலைய நூற்றாண்டு விழாவில் கலந்துகொண்டு வாசிப்பின் மேன்மை குறித்து பேசியபோது அண்ணாவின் வாழ்வில் நிகழ்ந்த நிகழ்வினை உருக்கமான நடையோடு கூறுகிறார்.*

*இவ்வாறு தன்னுடையக் கருத்துக்களை மக்களிடையே கொண்டு செல்ல நடப்பியல் சான்று கூறல், புள்ளி விவரம் கூறல், வருணனை நடை, உருக்கமான நடை முதலிய உத்திகளைக் கையாண்டுள்ளார் என்பதை அறியமுடிகிறது.*

## *முடிவுரை*

*இருபது, இருபத்தோராம் நூற்றாண்டு தமிழிலக்கிய வரலாறு ஆயினும், தமிழக வரலாறு ஆயினும், அதில் தனக்கென ஓர் தனியிடத்தைப் பெற்றிருப்பவர் கலைஞர் மு.கருணாநிதி ஆவார். சிறுகதை, கவிதை, நாடகம், கட்டுரை, வரலாற்றுப் புதினங்கள், இலக்கிய உரைகள், திரைப்படம், இதழியல், கடிதம் என்று தான் தொட்ட துறைகளில் எல்லாம் அதன் உச்சம் தொட்டவர் கலைஞர். பல்வேறு துறைகளில் தான் பெற்ற அனுபவங்களை எல்லாம் அரசியல் களத்தில் மேடைப்பேச்சுகளின் வழியே அனைவர்க்கும் கொண்டு சேர்த்த பெருமைக்குரியவர். அரசியல், இலக்கியம், கவியரங்கம், சட்டமன்றம் முதலான பேச்சுகளில் அரசியல் அவரது கொள்கை முழக்கத்தையும், இலக்கியம் ஆழ்ந்த புலமை நயத்தையும், கவியரங்கம் அனைவரையும் ஈர்க்கும் திறனையும், சட்டமன்ற உரைகள் நகைச்சுவை உணர்வும் கொண்டதாக அமைந்துள்ளது. கலைஞர் தன்னுடைய சொற்பொழிவுகளை நடப்பியல் உவமை, புள்ளி விவரம், ஒப்பீடு செய்தல், வருணனை, உருக்கமான நடை முதலிய உத்திகளின் கட்டமைத்துள்ள தன்மையை அறிய முடிகிறது.*

## *அடிக்குறிப்புகள்*

1. *கலைஞரின் படைப்பிலக்கியத் திறனாய்வு, ப.324*
2. *முனைவர் ஞானம், பேச்சுக்கலை, ப.89.*
3. *க. அன்பழகன், நீங்களும் பேச்சாளராகலாம், ப.53*
4. *அறந்தை. நாராயணன், மேடையில் பேசலாம் வாருங்கள், ப.58.*
5. *மேலது., ப.59*
6. *மு. கருணாநிதி, இளைய சமுதாயம் எழுகவே! பக்.74-72*
7. *நக்கீரன் வார இதழ், 03.06.2018*
8. *இரா. மோகன், கலைஞர் தமிழ், ப.161*
9. *மேலது., பக்.161-162.*
10. *மு. கருணாநிதி, மேடையில் வீசிய மெல்லிய பூங்காற்று, ப.24.*
11. *மேலது., பக்.90-91.*
12. *கலைஞரின் படைப்பிலக்கியத் திறனாய்வு, ப.170.*
13. *இரா. மோகன், முன்னூல், பக்.164-165.*

## *துணை நூற்பட்டியல்*


1. *நெடுஞ்செழியன், க., இராமலிங்கம், பெ., கலைஞரின் படைப்பிலக்கியத் திறனாய்வு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர். முதற்பதிப்பு, 1998*
2. *ஞானம், பேச்சுக்கலை, மணிமேகலை பிரசுரம், சென்னை. முதற்பதிப்பு, 2015*
3. *அன்பழகன், க., நீங்களும் பேச்சாளராகலாம், பூம்புகார் பதிப்பகம், சென்னை. ஆறாம் பதிப்பு, 2011*
4. *நாராயணன், அறந்தை., மேடையில் பேசலாம் வாருங்கள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை. எட்டாம் பதிப்பு, 2011*
5. *கருணாநிதி, மு., இளைய சமுதாயம் எழுகவே! திருமகள் நிலையம், சென்னை. ஐந்தாம் பதிப்பு, 2018*
6. *மோகன், இரா., கலைஞர் தமிழ், மணிவாசகர் பதிப்பகம், சென்னை. முதற்பதிப்பு, 2006*
7. *கருணாநிதி, மு., மேடையில் வீசிய மெல்லிய பூங்காற்றே, பாரதி பதிப்பகம், சென்னை. நான்காம் பதிப்பு, 1990*


********* ********* ********** ********* ********* ********** ********** **********